பக்கங்கள் 18 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## நாகை - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை 17ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(எம்.கே.ஷாகுல் ஹமீது)

நாகைக்கு வரவேண்டிய பயணிகள் கப்பல் தாமதமானதால் நாகை – காங்கேசன்துறை பயணிகள் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை 12.05.2024 அதிர்வு 286



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பம்! தரணியெங்கும் உணர்வெழுச்சியுடன் நிகழ்வுகள்!!

(எஸ்.நிதர்ஷன்)

தமிழினப் படுகொலையை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் இன்று ஆரம்பமாகியுள்ளது. இதையொட்டி தமிழர் தாயகத்திலும், புலம்பெயர்ந்து தமிழர் வாழும் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. 04







# சுமார் 4 ஆயிரம் பேர் ஊர்வலமாக வந்து வலுச்சேர்த்த கல்முனை தமிழர் போராட்டம்

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான நிர்வாக அடக்குமுறைகளைக் கண்டித்து பொதுமக்கள் – சிவில் அமைப்புக்கள் நடத்தி வரும் போராட்டம் நாளை திங்கட்கிழமை ஐம்பது நாட்களை எட்டுகின்றது.

அதையொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாபெரும் மனிதப் பேரணி கல்முனை நகரில் இடம்பெற்றது.

பேரணிக்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர். போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

ஊர்வலமாக சுமார் 4 ஆயிரம் பேர் வந்து போராட்டத்தில் பங்கேற்றனர். இதனால் கல்முனை தமிழர் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

இன்று 49 ஆவது நாளாக அந்தப் போராட்டம் கல்முனை வடக்கு பிரதேச



செயலக முன்றலில் நடைபெற்றது.

பெருமளவு மக்கள் பங்கேற்ற பேரணி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து தரவைப் பிள்ளையார் ஆலயம் வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை அடைந்தது. மிக நீண்ட நேரம் மக்கள் கோஷங்களை எழுப்பி பதாதைகளைத் தாங்கிய வண்ணம் வலம் வந்தனர்.

சுட்டெரிக்கும் வெயிலிலும் கொதிக்கும் தார் வீதியிலும் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றிய கோரிக்கைகள் தாங்கிய பதாதைகளுடன் பெருமளவு மக்கள் நடைபவனியாக சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் வந்து கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக அமர்ந்திருந்து போராட்டத்தில் கலந்துகொண்டமை ஏனைய மக்களையும் உணர்ச்சி வசப்படுத்தியது.











# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

**(கே.வசந்தன்)**

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தலை யொட்டி வவுனியாவில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப் பட்டது.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் குறித்த கஞ்சி நகர சபை பொங்கு தமிழ் நினைவுத் தூபி முன்பாக இன்று வழங்கி வைக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியையே மக்கள் உணவாக உட்கொண்டனர். அதனை நினைவு கூர்ந்து அடுத்த தலைமுறைக்கு வரலாற்றைக் கடத்தும் நோக்குடன் இவ்வாறு கஞ்சி வழங்கப்பட்டது.

வீதியால் சென்ற பலரும் அதனை வாங்கிப் பருகிச் சென்றமை குறிப்பிடத் தக்கது.














## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பம்...










அந்தவகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும், முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனியும் இன்று காலை யாழ். உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத் தூபியில் முன்னெடுக்கப்பட்டது.

காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவேந்தி பொதுச்சுடரை முன்னாள் போராளியும் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளருமான விஜயன் ஏற்றி வைத்தார். தொடர்ச்சியாக ஈகைச் சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியும் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழினப் படுகொலை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி யாழ். நகரிலிருந்து ஆரம்பமானது. இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டதுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

## நாகை - காங்கே....

கப்பல் சேவை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ்ப்பாணம் வரவிருந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

'சிவகங்கை' என்ற பெயர் கொண்ட பயணிகள் கப்பல் நாகை – காங்கேசன் துறை இடையே நாளை 13 ஆம் திகதி பயணத்தைத் தொடங்கவுள்ளது எனத் தகவல் வெளியாகியிருந்தது.

திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் சுபம் குரூப் ஆப் கம்பனி மற்றும் இன்ட் ஸ்ரீ ப்ரே சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஆகியவை இணைந்து 'சிவகங்கை' என்ற பெயரில் நாகையில் இருந்து காங்கேசன்துறைக்குப் பயணிகள் கப்பல் சேவையை நாளை முதல் இயக்க விருந்தன.

இந்நிலையில் நாகையில் இருந்து காங்கேசன்துறைக்கு நாளை தொடங்க விருந்த கப்பல் போக்குவரத்து ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நாகைக்கு வர வேண்டிய பயணிகள் கப்பல் தாமதமானதால் எதிர்வரும் 17 ஆம் திகதிக்குக் கப்பல் சேவை ஒத்திவைக்கப்பட்டுள் ளது.

இந்த அறிவிப்பால் யாழ்ப்பாணம் வரவிருந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். முன்பதிவு செய்த பயணிகள் பயணத் திகதியை மாற்றிக்கொள்ளலாம் அல்லது கட்டணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள் ளலாம் என அறிவிக்கப்பட்டுள் ளது.

# போலித் தேசியம் என்ற மாயை அரசியலிலிருந்து படிப்படியாக வெளியே வருகின்றனர் தமிழ் மக்கள்

## சாவகச்சேரியில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் என்பது தமிழ் மக்களுக்குப் பயனற்ற விடயம், அதை முன்னெடுப்பது தோல்வியிலேயே முடியும் எனத் தமிழ் மக்கள் வெளிப்படையாகக் கூறத் தொடங்கியுள்ளமையானது தமிழ் மக்கள் தம்மைப் பீடித்திருந்த போலித் தேசியம் என்ற மாயை அரசியலிலிருந்து படிப்படியாக வெளிச்சத்தக்கு வருவதை உணர்த்துகின்றது" – என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "நடைமுறைச் சாத்தியமான எமது கட்சியின் வழிமுறையுடன் மக்கள் கைகோர்ப்பார்களானால் விரைவில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் என்னால் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும்" – என்றும் குறிப்பிட்டுள்ளார்.



அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் தென்மராட்சி பிரதேசத்தை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள், வட்டார செயலாளர்கள், வட்டார நிர்வாக உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு இன்று சாவகச்சேரியில் நடைபெற்றது.

இதன்போது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடைமுறைச் சாத்தியமான வழிகள் தொடர்பில் எமது கட்சி மட்டும் தெளிவாக இருக்கின்றது. ஆனால், இந்த விடயத்தில் எமது கட்சி இருப்பதை விட மக்களும் தெளிவாக இருக்க வேண்டும்.

குறிப்பாக நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூன்று வேட்பாளர்கள் பிரதானமானவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இந்த மூவரில் ஒருவருடன் கலந்துரையாடி எமது வாக்குகளை உங்களுக்குத் தரலாம், எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற பேரம் பேசலைச் செய்து கலந்துரையாடினால்தான் ஒரு ஆரோக்கியமான சூழல் உருவாகும்.

ஆனாலும், தற்போதைய நிலையில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவதே சரியானதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். அதனால்தான் எமது கட்சியின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் என்பதை நாம் ஏற்கனவே வெளிப்படையாக அறிவித்தவிட்டோம்.

அதுமட்டுமல்லாது தற்போதைய காலச் சூழலில் தென்னிலங்கையில் போட்டியிடும் ஒரு தரப்பினருடன் இணக்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு ஆதரவு வழங்கி அதனூடாகப் பேரம் பேசும் சக்தியாக நாம் உருவாகும் நிலையை உருவாக்குவதே அவசியமாகும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தமிழ்த் தரப்பினர் சரியான முறையில் கையாளாத காரணத்தால்தான் தமிழ் மக்கள் தற்போதைய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

37 வருடங்களாக இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம், மாகாண சபை முறைமையை ஆரம்பித்ததனூடாகத்தான் தமிழர்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என நான் சொல்லி வருகின்றேன்.

ஆனாலும் அதனை "செவிடன் காதில் ஊதிய சங்கு" போல் யாரும் புரிந்து கொண்டிருக்கவில்லை. ஆனால், தற்போது அது பற்றி பலரும் முணுமுணுக்கின்றார்கள். இது ஆரோக்கியமானதாக இருந்தாலும் அன்று அதை எதிர்க்கும்போதும், இன்று அதனை ஆதரிக்கும்போதும் உண்மைத்தன்மையுடன் தமிழ்த் தரப்பினர் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதேநேரம் இதயசுத்தியுடன் கூடிய உண்மைத்தன்மையாக முன்வருவார்களேயானால் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

மேலும் புண்ணுக்கு வலியா? மருந்துக்கு வலியா? எனப் பார்த்தால் கடந்த கால தமிழ் அரசியல்வாதிகள் மருந்துக்குத்தான் வலி என்ற நிலையிலிருந்தே அரசியலை முன்னெடுத்திருந்தனர். அது என்ன நிலைமையில் மக்களைக் கொண்டு விட்டுள்ளது என்பதை இன்று உணர முடியும்.

எனவே, புண்ணுக்குத்தான் வலி என்பதைத் தமிழ் மக்கள் சரிவர உணர்ந்து யார் தமது பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்கின்றார்களோ அவர்களோடு அணிதிரள்வதுதான் சரியானது." – என்றார்.

# வெளிநாடு அனுப்புவதாகக் கூறி பண மோசடி: மொட்டுக் கட்சியின் தீவக அமைப்பாளர் கைது

## யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பொலிஸார் அதிரடி நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இன்று கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மோச டியில் ஈடுபட்டார் என்று தெரிவித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தீவக அமைப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சு.கவில் புதிய குழப்பம்

சபாஷ் சரியான போட்டி...!

1958 இல் வெளியான 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' படத்தில் வரும் ஒரு 'பஞ்ச்' வசனம் இது!

இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரு பிரிவினர் இரு துருவங்களாக நின்று கொண்டு கட்சி குறித்து நடத்தும் சண்டப்பிரசண்டத்தைப் பார்க்கும் போதும் இந்த வாசகம்தான் நினைவுக்கு வருகின்றது.

சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீடிப்பதற்கு எதிராக கட்சியின் முன்னாள் தலைவியும் மற்றொரு முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஊடாக வாங்கிய இடைக்காலத் தடை உத்தரவை அடுத்து, கட்சி இரண்டு படுகின்றது.

இரண்டு குழுக்களாக துருவமயப்பட்ட தரப்புகள் நடத்தும் அக்கப்போர் கட்சியை உருப்பட்டு மீண்டெழ விடுமா என்ற சந்தேகத்தைத்தான் தந்து நிற்கின்றது.

மைத்திரி தரப்புக்கு மாற்றான குழு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை பதில் தலைவராகவும் துமிந்த திஸநாயக்கவை பதில் பொதுச் செயலாளராகவும் கொண்டு தனியாக இயங்குவதுடன் தாங்களே சுதந்திரக் கட்சி நிர்வாகிகள் என்றும் பிரகடனப்படுத்தியும் வருகின்றது.

அந்தக் குழுவே கொழும்பு மருதானை டார்லி வீதியில் உள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கின்றமையுடன், வருகின்ற ஜூன் இரண்டாம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் கட்சியின் அடுத்த தேசிய மாநாட்டைக் கூட்டி கட்சியை மறுசீரமைக்கவும், புதிய நிர்வாகிகளை உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்யவும் நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவித்திருக்கின்றது.

இதற்கிடையில் -

கட்சியை இவ்வளவு காலமும் கட்டுப்பாட்டில் வைத்திருந்த தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இருந்த துஷ்மந்த மித்திரபாலவும் அவர்களுக்கு எதிராகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை உத்தரவுகளை அடுத்து கட்சி மீதான கட்டுப்பாட்டை நழுவ விட்டு, இழந்து வருகின்றனர் என்பது கண்கூடு.

முதலில் மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைவராகச் செயல்பட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்தது.

இந்தச் சூழ்நிலையில் கட்சிக்கு வெளியில் இருந்து அமைச்சர் விஜயதாஸா ராஜபக்ஷவைக் கூட்டி வந்து கட்சியின் பதில் தலைவர் என்று மைத்திரி அணி அறிவிக்க, அந்த விடயமும் நீதிமன்றத்திற்குப் போனது.

அதை ஒட்டி, பதில் தலைவராக விஜயதாஸா ராஜபக்ஷவும், பதில் பொதுச் செயலாளராக துஷ்மந்த மித்திரபாலவும் செயற்பட நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியது. இதனால் மைத்திரி அணி உடனடியாக மீண்டெழுந்து, கட்சியை கைப்பற்றி, வழிநடத்துவதற்கான வாய்ப்புகள் அருகிப் போகின என்றே கூறப்பட்டது.

இதற்கிடையில் மைத்திரி குழுவினர் இன்று கோட்டையில் கட்சியின் செயற்குழுவை கூட்டினர் என்றும் -

அந்தக் கூட்டத்தில் கட்சித் தலைமை பதவியில் இருந்து தாம் விலகுகின்றார் என மைத்திரிபால சிறிசேன அறிவிக்க, அந்த இடத்துக்கு கட்சியின் தலைவராக விஜயதாஸா ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அணியில் கட்சித் தலைவராக மைத்திரிபால சிறிசேனவும், பதில் பொதுச் செயலாளராக துஷ்மந்த மித்திரபாலவும் செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருக்கையில், இந்தச் செயற்குழுக் கூட்டத்தை கூட்டியவர்கள் யார்? அவர்களுக்குக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம் எங்கிருந்து வந்தது? - என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

மைத்திரிபால சிறிசேன தலைவராகப் பதவி வகிக்க நீதிமன்றம் தடை விதித்திருக்கையில், அந்தப் பதவியை துறக்கும் முடிவை அவர் எடுத்தார் என்பதையாவது ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் கட்சியின் பதில் தலைவராக விஜயதாஸா ராஜபக்ஷ செயல்படுவதற்கு நீதிமன்றம் தடை விதித்திருக்கையில், அவர் எப்படித் தலைவராக தேர்வாகுவார், பதவியேற்பார் என்ற கேள்விகள் எல்லாம் கூட எழுகின்றன.

மொத்தத்தில் குழப்பத்தின் சங்கமம்தான் சுதந்திரக் கட்சி என்றாகிவிட்டது.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## till May 12th




***Gunaam's super market*** இந்த வாரம் அள்ளித்தரும் ***super deal*** அனைத்துப் பலசரக்குப் பொருட்கள், தாயக பழ வகைகள், மீன், இறைச்சி, மரக்கறிகள் ***fresh***ஆக மிகமிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

***Frozen*** இறால், நண்டு, ***Frozen Rotti, Frozen Gram, Coconut,*** சமையல் பாத்திரங்கள், பூஜைப் பொருட்கள், மண்வெட்டி, பிக்கான், பூக்கன்றுகள், மரக்கறி, அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 777 Papadam buy one | - $1.99 |
| Buy 3 for | -$5.00 |
| 200g Tamarind 5for | - $5.00 |
| Kott mee Noodles 5 for | - $5.00 |
| Harischsndra papadam 5 for | -$5.00 |
| Maggi coconut milk powder | -$3.99 |
| 800g coconut milk powder | -$11.99 |
| Niru Tin Fish 3for | - $10.00 |
| Kloadiya Tin fish 3 for | - $10.00 |
| Aroy_D coconut milk tin 4 for | - $ 10.00 |
| 3L MR.Goudas sun flower oil | - $ 8.99 |
| MR. Goudas sea salt | - $ 1.49 |
| MR. Goudas table salt | - $ 1.00 |
| 71b MR. Goudas brown sugar | - $ 8.99 |
| Priya Basmati rice | - $ 7.99 |
| 41b mysoor Dall | - $ 3.99 |
| Uruthira Serage Samba rice | - $ 15.99 |
| 400g milo | - $ 4.99 |
| MR. Goudas condensed tin milk | -$ 1.49 |
| Ba Ba Payasam mix | - $ 2. 99 |
| Ba Ba uppuma mix | - $ 2.99 |
| Narasu's coffee | - $ 4.99 |
| Maharaja அரிசிமா | - $ 8.99 |
| Uruthira நாட்டுச்சக்கரை | - $ 3.99 |
| 81b NIRU mysoor Dall | - $ 7.99 |
| Ceycan Matta Rice | - $ 8.99 |

| | |
|---|---|
| திரிபோசா மா | -$ 6.99 |
| MD mango and mixed Fruit cordial | - $ 4.99 |
| VSP நல்லெண்ணை | - $12.99 |
| கத்தரிக்காய் | - $1.99 1b |
| சின்ன வெங்காயம் | - $5.99 1b |
| Drum stick | - $5.99 1b |
| Karunsiyam | - $4.99 1b |
| யாழ்ப்பாணத்து இராசவள்ளி | - $3.99 1b |
| Beetroot | - $1.29 1b |
| தக்காளி | - $1.99 1b |
| Pumpkin | - $1.49 1b |
| யாழ்ப்பாணத்துக் கருணைக்கிழங்கு | - $6.99 1b |
| Ceylon விளைமீன் | - $8.99 1b |
| ஊர் ஆட்டிறைச்சி | - $8.99 1b |
| ஊர்க் கோழி | - $7.99 1b |
| கடுக்கனிப் பாரை | - $8.99 1b |
| இறால் shrimp | - $3.99 1b |
| Blue fish | - $3.99 1b |
| சுறா fish | - $5.99 1b |
| முழு king fish | - $8.99 1b |
| நெத்தலி | - $7.99 1b |
| சுராப்பாரை | - $7.99 1b |
| சூடை | - $3.99 1b |
| திருக்கை | -$5.99 1b |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998





# முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தின நிகழ்வு அம்பாறையில்

**(எம். எப். றிபாஸ்)**

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம் முன்னணியின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஒலுவில் கிறீன்வாசல் ஹோட்டலில் இன்று ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது மாவட்ட நிறைவேற்றுப் பணிப்பாளரும், முன்னாள் தேசிய தலைவருமான எம்.ஐ. உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு அமைப்பின் மாவட்ட ஆலோசகர்கள், முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள், கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியில் கடந்த காலங்களில் பல்வேறு பணிகளாற்றிய சமூக சேவையாளர்களுக்கு நினைவுச் சின்னங்களும், பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன.





# மாவடிப்பள்ளி அரபுக் கல்லூரிக்கு முஷாரப் எம்.பியால் நிதி ஒதுக்கீடு

**(ஏயெஸ் மௌலானா)**

அம்பாறை மாவட்டம், காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி மர்க்கஸ் சாஆத் இஸ்லாமிய்யா அரபுக் கல்லூரியின் அபிவிருத்திக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம். எம். முஷாரப் 7 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த அரபுக் கலாசாலையை மேம்படுத்தும் பொருட்டு கல்லூரியின் அதிபர் மற்றும் நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுத் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்தத் தொகையை அவர் ஒதுக்கீடு செய்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஏ.எம். அஸாம் மௌலவி தெரிவித்தார். இந்த நிதியின் ஊடாக தற்போது கல்லூரி மண்டபத்துக்கு மின்விசிறிகள் மற்றும் மின்சார உபகரணங்களை பொருத்தும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அல்லைநகர் கிழக்கு கிராமத்துக்கு நிரந்தரமாக கிராம சேவகர் தேவை!

## நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர் மக்கள்

மூதூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தோப்பூர் அல்லைநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குத் தசாப்தத்துக்கு மேலாக நிரந்தர கிராம சேவையாளர் நியமிக்கப்படவில்லை.

இணைப்புச் செய்யப்பட்ட கிராம சேவையாளர் வாரத்தில் இரு நாள்கள் கடமையில் ஈடுபடுவதால் தங்களது தேவைகளை நிறைவு செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்று இந்தக் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட புதிய கிராம சேவையாளகளுக்கு நியமனம் வழங்கும் போது அல்லைநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு நிரந்தரக் கிராம சேவகர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






# திருகோணமலை றோட்டரிக் கழக 45 ஆவது தொடக்க ஆண்டு விழா!

(ஹஸ்பர்)

திருகோணமலை றோட்டரிக் கழக 45 ஆவது தொடக்க ஆண்டு விழா, றோட்டரி இல்லம், டைக் வீதி, திருகோணமலையில் நடைபெற்றது.

திருகோணமலை பொது வைத்திய சாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஆர். ரோஹான் குமார இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த வைபவத்தில் திருகோணமலை றோட்டரிக் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி சௌந்தரராஜன் றோட்டரிக் கழகம் சார்பில் வரவேற்பு உரை நிகழ்தினார்.

தொடர்ந்து, மறைந்த றோட்டரி அங்கத்தவர்கள் நினைவு கூறப்பட்டனர்.

கழகத்தின் செயலாளர் என்.டி. ரகுராம், 2023 – 2024 ஆம் ஆண்டின் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறினார்.

ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் சிறந்த பெறுபேறு பெற்ற செல்வி கே. தான்யவுக்கு பணப் பரிசு வழங்கப்பட்டது.

திருகோணமலை றோட்டரிக் கழகத்தில் 25 வருடங்களுக்கு மேல் சிறப்பாகச் சேவையாற்றிய 12 அங்கத்தவர்கள் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த 13 வயது ஹரிஹரன் தன்வந்தும் கௌரவிக்கப்பட்டார்.







# ட்ரோன்' தொழில் நுட்ப முறை மூலம் கிண்ணியாவில் கிருமி நாசினி விசிறல்



(ஹஸ்பர் )

முதன் முறையாக கிண்ணியா விவசாயிகள் 'ட்ரோன்' தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தங்களது நெற்பயிர்களுக்குக் கிருமி நாசினியை விசிறினர்.

கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்கு உட்பட்ட பீங்கான் உடைந்தாறு, வன்னியனார் மடு விவசாய நிலத்தில் இந்தச் செயற்பாடு இன்று (12) இடம் பெற்றது.

'ட்ரோன்' தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி முதன் முறையாக இதனை முன்னெடுத்ததாகவும் இதன் மூலம் புதிய அனுபவம் பயிற்சிகளை பெற்றதாகவும் அந்தப் பகுதி விவசாய சம்மே என ஊடக பேச்சாளர் எம்.எம்.மஹ்தி தெரிவித்தார். பல ஏக்கர் வயல் நிலங்களுக்கு இலகுவாகக் கிருமி நாசினியை விசிற புதிய தொழில் நுட்பம் முன்னெடுப்பது இதுவே முதன் முறையாகும் என்றும் தெரிவித்துள்ளனர்.

# மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள், செவிலியர்கள் ...!

## சர்வதேச தாதியர் தினம் - மே 12



**தி. தில்லை துஷாந்தி**
தாதிய உத்தியோகத்தர்
தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

சாதாரண வைத்திய சேவைகளில் இருந்து யுத்தகால வைத்திய சேவைகள்வரை ஒவ்வொரு கட்டத்திலும் தாதியர்களது சேவைகள் வியாபித்துக் காணப்படுகின்றது. பக்குவமாகவும் அதேநேரம், பொறுப்புள்ள முறையிலும் மனித அசிங்கங்களைக் கூட கவனத்தில் கொள்ளாமல் உணர்வோடு உரசி இவர்கள் ஆற்றும் சேவை மெச்சத்தக்கதே. இந்த அடிப்படையில் இவர்களின் சேவைகளை மனித சமூகம் நினைவுகூர வேண்டியது சமூகத்தின் ஒரு கட்டாயக் கடமையாகவும் உள்ளது.

வெள்ளைச் சீருடை என்றாலே சேவையின் அடையாளமாய், தாதியர்கள்தான் நினைவுக்கு வருவர். பொறுமையும், சகிப்புத் தன்மையும் இந்தப் பணியின் இருகண்கள். உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு மே 12 ஆம் திகதியும் சர்வதேச தாதியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

செவிலியர்கள் (தாதிகள்) சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பும் அவர்களின் சேவைத் தியாகங்களையும் சிறப்பாக நினைவுகூர இத்தினம் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளது. சர்வதேச செவிலியர் அமைப்பு இத்தினத்தை 1965ஆம் ஆண்டிலிருந்து நினைவு கூருகிறது.

1953இல் ஐக்கிய அமெரிக்காவின் அரச சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியான டொரத்தி சதர்லாண்ட் என்பவர் இந்தத் தினத்தைச் செவிலியர் தினமாக அறிவிக்க வேண்டுமென விடுத்த அழைப்பை அன்றைய ஜனாதிபதி ஐசன்ஹோவர் நிராகரித்துள்ளார். இருப்பினும் 1965 ஆம் ஆண்டிலிருந்து நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்த நாளான மே 12 ஆம் நாளைச் சிறப்பாக நினைவுகூர முடிவு செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் ஆண்டுதோறும் மே 12 ஆம் நாளில் லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் சம்பிரதாய பூர்வமாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இங்குள்ள செவிலியர் (தாதிகள்) மூலம் மாளிகையில் உள்ள விளக்கு ஏற்றப்பட்டு அங்கு வருகைதரும் செவிலியர்கள் ஒவ்வொருவராலும் கைமாறப்பட்டு பின்னர் அது அங்குள்ள உயர்பீடத்தில் வைக்கப்படும்.

இது ஒரு செவிலியரில் இருந்து மற்றொருவருக்கு தமது அறிவைப் பரிமாறப்படுவதைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. அதேநேரம், 1974 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் மே 9 முதல் மே 15 வரை செவிலியர் வாரம் கொண்டாடப்படுகிறது.

ஒரு மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள் செவிலியர்கள் என்பது எல்லோரும் ஒத்துக்கொள்ளும் ஒரு விஷயம். "செவிலியர்கள்" உலக அரங்கில் அங்கீகரிக்கபடுகிறார்கள். இன்றைய மனித சமூகத்துக்கான தாதிமாரின் சேவையை இலகுவாக மதிப்பிட்டுவிட முடியாது.

மறுபுறமாக தாதியர்தினம் என்று வரும்போது நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத் தாதியான புளோரன்ஸ் நைட்டிங்கேலை நினைவு கூராமல் இருக்க முடியாது. தாதித்தொழிலின்




புனிதத்துவத்தை உணர்த்திய இவர் போரில் காயம்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டு சேவை செய்தார்.

தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் இவரே முதலில் ஆரம்பித்தார். 'விளக்கேந்திய சீமாட்டி', 'கை விளக்கேந்திய காரிகை' என்று அனைவராலும் போற் றப்பட்ட இவர் ஒரு எழுத்தாளரும், புள்ளி விவர வியலாளரும் ஆவார். பிரித்தானியாவில் செல்வச் செழிப்புமிக்க உயர்குடிக் குடும்பமொன்றைச் சேர்ந்த இவர், இத்தாலி, புளோரன்ஸ் நகரில் பிறந்தார். இவர் பிறந்த இடத்தின் பெயரைத்தழுவி இவருக்குப் பெயரிட்டார்கள்.

இவரின் தந்தை வில்லியம் எட்வர்ட் நைட்டிங்கேல் (1789-1880), தாயார் பிரான்செஸ் நைட்டிங்கேல் (முன்னர் ஸ்மித் - 1794- 1875). புளோரன்சின் தாய் வழிப் பாட்டனான வில்லியம் சிமித் அடிமை முறை ஒழிப்புக்காக வாதாடியவராவார். 'எம்ப்லீ பார்க்' இது புளோரன்ஸ் நைட்டிங்கேலின் குடும்ப வசிப்பிடமாகும். சிறுவயதில் கணிதத்தில் திறமையுள்ளவராயிருந்த இவர் தனது தந்தையாரின் கற்பித்தலில் அப்பாடத்தில் வல்லவரானார்.

குறிப்பாகப் புள்ளிவிவரவியலில் ஆர்வமுள்ளவராக இருந்த இவர், தனது ஆய்வறிக்கைகளில் புள்ளி விவரங்களை அதிகளவில் பயன்படுத்தினார். தரவுகளை வரைபடமாக்கி அளிப்பதில் முன்னோடியாகத் திகழ்ந் தார். பலவிதமான வரைபுகளை உருவாக்கி அவற்றின் மூலம் தரவுகளை வகைப்படுத்தி அறிக்கைகளில் பயன்படுத்தினார்.

இந்தியாவின் கிராமப்புறங்களின் சுகாதாரம் பற்றிய விரிவான ஆய்வை மேற்கொண்ட புளோரன்ஸ் நைட்டிங்கேல் சீர்திருத்தப்பட்ட மருத்துவ மற்றும் கிராம கவனிப்புச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதிலும் முக்கியமானவராய் இருந்தார். 1858 இல் பதவியேற் றதன் மூல அரச புள்ளிவிவரவியல் கழகத்தின் தலை மைப் பொறுப்பேற்ற முதல் பெண்மணியானார். அதே போல இவர் ஒரு எழுத்தாளருமாவார். ஒரு கிறிஸ்தவரான இவர் தனக்கு, இறைவனால் விதிக்கப்பட்ட பணியாகவே தாதியர் சேவையை உணர்ந்து மேற்கொண்டார். 1837 ஆம் ஆண்டில் அவருக்கு ஏற்பட்ட இந்த உணர்வு அவரது வாழ்நாள் முழுதும் நீடித்தது. பெற்றோரின், எதிர்ப்புக்கும் மத்தியில், தாதியர் சேவையில் ஈடு

தொடர்ச்சி▼

# மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள், செவிலியர்கள் ...!

தொடர்ச்சி▲

படவேண்டும் என்னும் தனது முடிவை புளோரன்ஸ் 1845 ஆம் ஆண்டு அறிவித்தார்.

இதையடுத்து தன் வாழ்நாளையே தாதிச் சேவையில் இவர் இணைத்துக் கொண்டமை இவரது உள விருப்பையும், அவரது காலத்தைய பெண்ணுக்குரிய எதிர்பார்ப்புகளை முறியடிப்பதற்கான அடை யாளப்படுத்தலாகவும் கொள்ளப்படுகின்றது. அக் காலத்தில் தாதியர் சேவை ஒரு மதிப்புள்ள பணியாகக் கருதப்படவில்லை. வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களே இப்பணியில் ஈடுபட்டு வந்தனர். அக்காலத்தில் தாதியர் சமையல் வேலையாட்களாகவும் உயர்குடும்பங்களில் வேலை செய்யவேண்டி இருந்தது.

புளோரன்ஸ் வறியவர்கள் மீதும், இயலாதவர் மீதும் அக்கறை கொண்டிருந்தார். 1844 ஆம் ஆண்டு டிசம்பரில், இலண்டனிலிருந்த ஆதரவற்றோர் விடுதியொன்றில் வறியவர் ஒருவர் இறந்தது பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. இதனைத் தொடர்ந்து புளோரன்ஸ், ஆதரவற்றோர் விடுதிகளில் மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக முன்னணியில் நின்று வாதாடினார். அக்காலத்தில் வறியோர் சட்டம் தொடர்பான சபையின் தலைவராக இருந்த சார்லஸ் வில்லியர்ஸ் என்பவரின் ஒத்து ழைப்பையும் அவர் பெற்றுக்கொண்டார். இது வறியோர் சட்டத்தில் சீர்திருத்தம் கோருவதில் அவரை ஈடுபடுத்தியதுடன், மருத்துவ வசதிகளின் வழங்கலுக்கும் அப்பால் அவரது ஈடுபாட்டை விரிவாக்கியது.

1846 ஆம் ஆண்டில் இவர் ஜேர்மனி சென்றார். அங்கு கெய்சர்ஸ்வர்த் மருத்துவமனையில் நோயாளிகளுக்குக் வழங்கப்படும் கவனிப்புகளும், மருத்துவச் சேவைகளும் இவரை மிகவும் கவர்ந்தன. 1851 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 4 மாதங்களாக ஜேர்மனியில் கெய்சர்ஸ்வர்த் மருத்துவமனையில் இவர் தீவிரப் பயிற்சியைப் பெற்றார். தாதியர் சேவையில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதிலிருந்து திருமணம் தடை செய்யும் எனக் கருதி ரிச்சர்ட் மொங்க்டன் மில்ன்ஸ் எனும் அரசியல்வாதியுடனான தனது உறவை முறித்துக் கொண்டார்.

பின்னாளில்– சிறந்த அரசியல் வாதியும், போர்ச் செயலராகப் பணியாற்றியவருமான சிட்னி ஹேர்பேர்ட் என்பவரை ரோமில் சந்தித்து அவர்பால் ஈர்க்கப்பட்டார். சிட்னி ஹேர்பேர்ட் ஏற்கெனவே மணமானவர். எனினும் இருவரும் வாழ்நாள் முழுதும் நெருங்கிய நண்பர் களாகத் திகழ்ந்தனர். கிரீமியாவில் நைட்டிங்கேல் ஆற்றிய பணிகளுக்கும், பொதுவாக அவரது துறையில் ஆற்றிய பணிகளுக்கும், ஹேர்பேட் வசதிகள் செய்து கொடுத்ததுடன் ஊக்கமும் கொடுத்து வந்தார். புளோரன்சும் ஹேர்பேட்டின் அரசியல் பணிகளுக்கு ஆலோசனை வழங்கி வந்தார் எனக் கூறப்படுகின்றது.

ரஷ்யப் பேரரசிற்கும், பிரான்ஸ் – ஐக்கிய இராச்சிய மற்றும் ஒட்டோமான் பேரசுப்படைக் கூட்டணிக்குமிடையே 1854 – 1856ம் ஆண்டு நடந்த கிரிமியன் போரில் தனது மருத்துவப் பங்களிப்பின் மூலம் புளோரன்ஸ் நைட்டிங்கேல் புகழ் பெற்றவரானார். இந்த யுத்தத் தின்போது வெளிச்சுகாதார விடயங்களில் இவர் கூடிய கரிசனை காட்டினார். மேலும், மருந்துத் தட்டுப்பாடும், குறையூட்டமும் அதிக பணியுமே நோயாளிகளான வீரர்களின் இறப்புக்குக் காரணமென புளோரன்ஸ் நைட்டிங்கேல் கருதினார்.

இந்தப் போர் அனுபவம் அவரது பிற்கால வாழ்வில் சுகாதாரமான சூழலைப் பேணலின் முக்கியத்துவத்தை



அவர் எடுத்துரைப்பதில் பெரும்பங்கை வகித்தது. பிரித்தானியாவில் இருந்த இராணுவ மற்றும் பொது மருத்துவமனைகளில் கவனிப்பையும், சூழலையும் மேம்படுத்த வேண்டுமென்று நைட்டிங்கேல் வாதாடி வந்தார். மருத்துவ வசதிகளுக்கும், சுகாதார நுட்பங்க ளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த மருத்துவமனைகள் பற்றிய குறிப்புக்கள் , அக்காலத்தில் தாதியர்களுக்கான மிகச் சிறந்த பாட நூலாகக் கருதப்பட்ட தாதியர்பணி பற்றிய குறிப்புக்கள உடல்நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள், பிரித்தானிய இராணுவத்தின் மருத்துவமனை நிர்வாகமும், செயல் திறனும் என்பவை நைட்டிங்கேல் எழுதிய புகழ் பெற்ற நூல்களுள் சில. போரிலிருந்து நாடு திரும்பிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் சாதனைப் பெண்மணியாக வரவேற்கப்பட்டார்.

விக்டோரியா அரசிக்கு அடுத்தபடியாக மிகவும் அறியப்பட்ட பெண்ணாக பிபிசியால் இனங்காட்டப்பட்டார். விக்டோரிய அரசியின் வேண்டுகோளை ஏற்று படைவீரர்களின் உடல் நலன் குறித்த அரசு ஆணைக்குழுவை அமைப்பதிலும் அவ்வாணைக் குழுவுக்குத் தேவையான அறிக்கைகள் ஆயத்தப்படுத்தி வழங்குவதிலும் ஈடுபட்டார். அத்துடன், அரசாணைக் குழுவுக்கு இவர் சமர்ப்பித்த அறிக்கையில் படை வீரர்களின் இறப்புக்கு படைவீரர்களின் வாழ்க்கைத் தராதரம் மற்றும் சுகாதாரமான சூழல் கீழ்மட் டத்திலிருப்பதுவும் முக்கிய காரணமென எடுத்துரைத்தார்.

பெண்ணாகையால் இவ்வாணைக் குழுவுக்குத் தலைமை தாங்க இவருக்கு அனுமதி இருக்கவில்லை. சிட்னி ஹேர்பேர்ட் தலைமைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அறிக்கையில் குறிப்பிட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் புளோரன்ஸ் நைட்டிங்கேல் முன்னின்று செயலாற்றினார். மேற்குறித்த ஆணைக்குழுவின் செயற்பாட்டின் மூலம் படை வீரர்களது மருத்துவ கவனிப்பு மாற்றம் பெற்றதுடன் இராணுவத்தினருக்கான மருத்துவப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது.

தாதியர் சேவையை நிறுவி அதை முன்னேற்றும் பணியிலேயே அவர் தனது வாழ்நாளைக் கழித்தார். மருத்துவமனைத் திட்டமிடலிலும் இவரது கருத்துக்கள் முன்னோடிகளாக இருந்ததுடன் இங்கிலாந்தின் பிற பகுதிகளிலும் ஏனைய நாடுகளிலும் அவை முன்னெடுத்துச் செல்லப்பட்டன. 1869 இல் எலிசபெத் பிளாக்வெல் என்பவருடன் இணைந்து பெண்களுக்கான மருத்துவ கல்லூரியொன்றையும் இவர் தோற்றுவித்தார்.

1882 ஆம் ஆண்டளவில் நைட்டிங்கேல் தாதியர்

தொடர்ச்சி▼

# மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள், செவிலியர்கள் ...!

**தொடர்ச்சி▲**

பரவலாகச் சேவை புரிந்தனர். அதீத களைப்பு ஏற்படல் எனும் நோய் இவருக்கு இருந்ததாக கருதப்படுகிறது. இவரது பிறந்த நாள் இந்நோய் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பும் நாளாகவும் உள்ளது.

எனவே இத்தினத்தில் புளோரன்ஸ் நைட்டிங்கேலை நினைவு கூரும் அதேநேரத்தில் உலகெங்கிலும் சேவை புரியும் தாதியர்களின் மகத்தான பணிகளையும் கண்ணியப்படுத்தி கௌரவிப்பதானது அவர்களுக்கு உலக மக்கள் வழங்கும் அதியுயர் அங்கீகாரமாகும்.

தாதியர்கள் சமூகத்துக்கு ஆற்றும் பங்களிப்பும் அவர்களின் சேவைத் தியாகங்களையும் சிறப்பாக நினைவுகூறும் பொருட்டு இத்தினம் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இன்றைய மனித சமூகத்துக்கான தாதிமாரின் சேவையை இலகுவாக மதிப்பிட்டுவிட முடியாது. சாதாரண வைத்திய சேவைகளிலிருந்து போர் கால வைத்திய சேவைகள்வரை ஒவ்வொரு கட்டத்திலும் இவர்களது சேவைகள் வியாபித்துக் காணப்படுகின்றது.

பக்குவமாகவும் அதேநேரம், பொறுப்புள்ள முறையிலும் மனித அசிங்கங்களைக்கூட கவனத்தில் கொள்ளாமல் உணர்வோடு உரசி இவர்கள் ஆற்றும் சேவை மெச்சத்தக்கதே.

இந்த அடிப்படையில் இவர்களின் சேவைகளை மனித சமூகம் நினைவுகூர வேண்டியது சமூகத்தின் ஒரு கட்டாயக் கடமையாகவும் உள்ளது.

அக்காலத்தில் தாதியர் சேவை ஒரு மதிப்புள்ள பணியாகக் கருதப்படவில்லை. வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களே இப்பணியில் ஈடுபட்டு வந்தனர். அக்காலத்தில் தாதியர் சமையல் வேலை ஆள்களாகவும் உயர் குடும்பங்களில் வேலை செய்ய வேண்டியிருந்தது.

ஆனால் தற்போது, பல்வேறு பணி சுமைகளுக்கும் பல சவால்களுக்கு இடையே தாதியர்கள் தங்களின் கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். அர்ப்பணிப்பின் அர்த்தத்தை விளக்கும் தாதியர் பொறுமையின் சின்னமாகவும் கருதப்படுகின்றனர்.

மருத்துவர்களின் வலது கையாகவும், நோயாளிகளுக்கு அன்பானவராகவும் பல கோணங்களில் தாதியர் அணுகப்படுகின்றனர். இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் சில பொறுப்பற்ற தரப்புக்களின் கொடூர முகத்திரைகள் அவ்வப்போது கிழித்தெறியப் பட்டாலும், ஒட்டு மொத்தமாக தாதிமை தொழில் உயர்வாகவே கருதப்படுகிறது, போற்றப்படுகிறது.

இத்தினத்தில் உலகெங்கிலும் சேவை புரியும் தாதியர்களின் மகத்தான பணிகளையும் கண்ணியப்படுத்தி கௌரவிப்பதானது அவர்களுக்கு உலக மக்கள் வழங்கும் அதி உயர் அங்கீகாரமாகும். தொடரட்டும் உங்கள் சேவை.



# தமிழரசுக் கட்சியின் கலந்துரையாடல்

**(ஹஸ்பர்)**

திருகோணமலை ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் செண்பக அம்மன் கோயிலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் ச. குகதாசன் தலைமையில் இந்த கலந்துரையாடல் இன்று (12) இடம்பெற்றது. விசேட பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டு கட்சி நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். கட்சியின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் உட்பட கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.






# தாய் உள்ளம் கொண்டோரை பாராட்ட அன்னையர் தினம் !

உலகளவில் அன்னையர் தினம் என்பது நம் வாழ்வில் தாய்மார்கள் மற்றும் அன்னையர்களின் நிபந்தனையற்ற அன்பு, தியாகங்கள் மற்றும் பங்களிப்புகளை போற்றி கொண்டாடுவதற்கான சிறப்பு நிகழ்வாகும்.

**அன்னையர் தினம்**

ஒவ்வொரு ஆண்டும் மே இரண்டாம் வாரம் ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னையர் தினம் கொண்டாடப்படும். இந்த ஆண்டு மே 12 ஆம் திகதி அன்னையர் தினம். தனி நபர்களையும் சமூகங்களையும் வடிவமைக்கும் தாய்வழி பிணைப்புகளை அங்கீகரித்து கொண்டாடுவதற்கு அன்னையர் தினம் உரிய நாளாகும்.

**அன்னையர் தினத்தின் கருப்பொருள்**

தாய்மார்கள், பாட்டி, மாற்றாந்தாய் மற்றும் நம்மை வளர்ப்பதிலும், வழிநடத்துவதிலும், ஆதரவளிப்பதிலும் முக்கிய பங்கு வகித்த தாய் உள்ளம் கொண்ட அனைவருக்கும் நன்றியையும் பாசத்தையும் வெளிப்படுத்தும் நாளாகும். ஒவ்வொரு ஆண்டும் கருப்பொருள் மாறிக் கொண்டே இருக்கும். எனினும் நாம் வாழ்வில் அசாதாரணமான மாற்றங்களை ஏற்படுத்திய பெண்களை அன்னையராக கருதி கௌரவிப்பதே நோக்கமாகும்.

**அன்னையர் தினத்தின் வரலாறு**

அன்னையர் தினத்தின் வரலாற்றை நாம் பண்டைய நாகரிங்களில் இருந்தே தெரிந்து கொள்ளலாம். தாய்மையை போற்றுவதற்கு பண்டிகைகள் கொண்டாடப்பட்டன. எனினும் அன்னையர் தினத்தின் அதிகார பூர்வ கொண்டாட்டங்கள் 20ஆம் நூற்றாண்டில் தொடங்கின. அமெரிக்காவைச் சேர்ந்த சமூக ஆர்வலரான அன்னா ஜார்விஸ் தாய்மார்களை கௌரவிக்கும் விதமாக அன்னையர் தினத்தின் தொடக்கத்துக்கு வித்திட்டுள்ளார்.

முதல் அன்னையர் தினம் 1908 ஆம் ஆண்டு மேற்கு வர்ஜீனியாவில் கொண்டாடப்பட்டது. இதைத் தொடர்ந்து 1914 இல் அன்னா ஜார்விஸின் முயற்சியால் அமெரிக்காவில் அன்னையர் தினம் தேசிய விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. அப்போதிலிருந்து அன்னையர் தினம் உலகளாவிய நிகழ்வாக மாறியது. ஒவ்வொரு நாட்டுக்கு ஏற்ப பல்வேறு பழக்கவழக்களில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

**அன்னையர் தினத்தின் முக்கியத்துவம்**

தாய்மார்களின் அளவிட முடியாத தியாங்களை பாராட்டுவதற்கான வாய்ப்பை அன்னையர் தினம் வழங்குகிறது. குடும்பம், சமூகங்களை கட்டமைப்பதில் தாய்மார்களின் விலைமதிப்பற்ற பங்கை பிரதிபலிக்க அன்னையர் தினம் நினைவூட்டுகிறது.

ஒரு உயிரை வளர்ப்பது, வழிகாட்டுவது, ஊக்கப்படுத்துவது என அனைத்திலும் பங்களித்த தாய் உள்ளம் கொண்ட நபர்களை பாராட்டுவதில் அன்னையர் தினம் முக்கியத்துவம் பெறுகிறது. குழந்தைகளை பெற்றெடுத்த பெண்களுக்கு மட்டுமல்ல தத்தெடுப்பு, வளர்ப்பு, பராமரிப்பின் மூலம் அன்பை வெளிப்படுத்திய நபர்களை கௌரவிக்கும் நாளாகும். அன்னையர் தினம் குடும்ப உறவுகளை வலுப்படுத்துவதற்கும் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும் அற்புதமான நாளாகும். தாய்மார்கள் தன்னலமின்றி வழங்கும் அன்பையும் ஆதரவையும் கொண்டாட குடும்பங்கள் ஒன்று கூட வேண்டிய நாள் இது.

இன்றைய டிஜிட்டல் உலகில் அன்னையர் தினம் தாய்வழி அன்பு மற்றும் தியாகத்தின் நினைவூட்டலாக அமைகிறது. இந்த நாள் நாம் தாயிடம் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள், உருவாக்கிய நினைவுகள் மற்றும் தாய்மார்கள் நமக்கு செய்த தியாகங்களைப் பற்றி சிந்திக்க ஒவ்வொரு தனிநபரையும் தூண்டுகிறது.





# 30 லட்சம் ரூபா பெறுமதியான பாலை மரக் குற்றிகள் கடத்தல்!

## இன்று அதிகாலை மடக்கிப் பிடித்த பொலிஸார்!!

(து.சுபேசன்)

அனுமதியின்றிச் சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் கடத்தப்பட்ட சுமார் முப்பது லட்சம் ரூபா பெறுமதியான பாலை மரக் குற்றிகள் இன்று (12) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் வீதி ஊடாக மணலுக்குள் மறைத்துக் கடத்தப்பட்ட சுமார் 150 மரக்குற்றிகளே சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகம்புளியடிச் சந்திப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது கடமையில் இருந்த பொலிஸாருக்கு மரக்கடத்தல்காரர்கள் ஒரு லட்சம் ரூபா லஞ்சம் வழங்கிய போதிலும் பொலிஸார் அதனை வாங்க மறுத்துள்ளனர் என்றும் இந்த நிலையில் அவர்கள் டிப்பர் வாகனத்தையும் மரங்களையும் கைவிட்டு விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களான டிசாந்தன்(பிசி 8453) மற்றும் இந்திக்க (பிசி 77094) ஆகியோரே இந்த மரக் கடத்தலை முறியடித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். தப்பி ஓடிய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

# திருக்கேதீஸ்வர ஆலய கொடிச்சீலை யாழிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது!



வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவுக்காக கொடிச்சீலை இன்று (12) யாழ்ப்பாணத்தில் இருந்து திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கொடிச்சீலை உபயகாரரான திருநெல்வேலி கென்னடி வீதியில் உள்ள சண்முகநாதன் கபிலன் வீட்டிலிருந்து கொடிச்சீலை எடுத்து செல்லப்பட்டு திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குக் கொடிச்சீலை வாகனத்தில் எடுத்து செல்லப்பட்டது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1982 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீஸ்வரத்துக்குக் கொடிச்சீலை வழங்கப்பட்ட நிலையில் யுத்த காலத்தில் அந்த நடைமுறை கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 40 வருடங்களுக்கு பின்னர் கடந்த வருடம் முதல் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ் மக்களுக்காக அரசியல் செய்யும் எக் கட்சிக்கும் சம அங்கீகாரம் கிடைக்கும்

## மன்னாரில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

(மன்னார்)

தமிழ் தேசிய பரப்பில் தமிழ் மக்களுக்கு அரசியல் செய்யும் எக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்தாலும், அவர்களுக்கான சம அங்கீகாரம் கொடுத்து தொடர்ச்சியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை செயல்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

கிழக்கு மாகாண ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்(ஜனா) தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆர். குமரேஸ் தலைமையில் மன்னாரில் மாவட்ட குழு அமைக்கும் நடவடிக்கை இடம் பெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அங்கத்துவ கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே கிழக்கு மாகாண ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2001 ஆம் ஆண்டு முரண்பாடுகளுக்கு மத்தியில் இருந்த போராட்ட இயக்கங்கள், மதவாத கட்சிகள் எல்லாம் இணைந்து ஒன்றிணைந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுவாக்கியது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுவாகிய காலத்தில் இருந்து இன்றுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பல கட்சிகள் வெளியேறியது. சில கட்சிகள் உள்ளே நுழைந்தன.

எப்படி இருந்தாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகப் பயணித்துக் கொண்டு வந்தது. 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தமிழரசுக் கட்சி வெளியேறியதை தொடர்ந்து மீதமிருந்த தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் மக்கள் விடுதலைக்கழகம்(புளொட்) ஆகியவை இணைந்து ஏற்கனவே வெளியேறிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபி.ஆர்.எல்.எப்), ஜனநாயக போராளிகள் கட்சி, மற்றும் தமிழ் தேசிய கட்சி உட்பட ஐந்து கட்சிகளும் இணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற பெயரில் தமிழ் தேசிய கூட்டமைப்பாக இன்றுவரை செயற்பட்டு வருகிறோம்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்பது தேர்தல் திணைக்களத்தில் ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இயங்குவதைப் போல் அல்லாமல் தற்போதைய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில் ஒரு கட்டமைப்புடன் நாங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒரு நிறைவேற்றுக் குழு இருக்கிறது. நிறைவேற்றுக் குழு எடுக்கும் முடிவுதான் இறுதி முடிவாக இருக்கும். இந்த வேளையில் தற்போது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயற்பாடுகளை மாவட்ட ரீதியாக நாங்கள் விஸ்தரித்துக் கொண்டு வருகிறோம்.

ஒவ்வொரு மாவட்டமாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் மாவட்ட கிளைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன

அதற்கமைவாக யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் மாவட்டக்குழுக்கள் உறுவாக்கப்பட்டுள்ள நிலையில், மன்னாரில் மாவட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் மாவட்ட குழுவை உருவாக்கி மிக விரைவில் இந்த மாவட்ட குழுக்களின் சம்மேளனத்தை நாங்கள் கூட்டி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயல்பாடுகளைத் தொகுதி, பிரதேச மற்றும் வட்டார ரீதியாக உருவாக்கி, தமிழ் மக்களுக்கு உரித்தான எதிர்கால அரசியல் தலைமைத்துவத்தைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அந்த வகையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒரு கட்டமைப்பு இருக்கிறது. இணைத் தலைவர்கள் இருக்கிறார்கள்.

தேவையான பதவிகள் இருக்கின்றன. அதற்கான யாப்பும் உள்ளது. யாப்பின் அடிப்படையில் தமிழ் தேசிய பரப்பில் செயல்படும் தமிழ் மக்களுக்கு அரசியல் செய்யும் எக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்தாலும், அவர்களுக்கான சம அங்கிகாரத்தை கொடுத்து தொடர்ச்சியாக இந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி யை செயல்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.–என்றார்.



# கிழக்குப் பாடசாலை மாணவருக்கு போக்குவரத்துப் பாதுகாப்பு சீருடை!

## ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கினார்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு வீதி போக்குவரத்து பாதுகாப்பு சீருடைகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் வீதி போக்குவரத்து பொலிஸாருடன் இணைந்து வீதியைக் கடக்கும் மாணவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் மாணவர்களுக்கே இந்தச் சீருடைகள் வழங்கப்பட்டன.

இன்னும் ஒரு மாத காலத்துக்குள் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் முன்பாக வீதித்தடைகளை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் உறுதியளித்தார்.





# 'உள்ளச் சிதறல்கள்' நூல் வெளியீடு!

**(வாஸ் கூஞ்ஞ)**

பேசாலை எழுத்தாளர் ஐ.மதிவளனின் 'உள்ளச் சிதறல்கள்' எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா பேசாலையில் நடைபெற்றது.

பேசாலை ஜோன் மேரி விடுதியில் நேற்று சனிக்கிழமை (11) பேசாலை வளர்கலை மன்றத்தின் அனுசரணையுடன் இந்த மன்றத் தலைவர் இ. கெனிசியஸ் லியோன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக அருட்பணி ஜே.டெனிஸ் குரூஸ் அடிகளார் , சட்டத்தரணிகள் அன்ரனி மடுத்தீன் , பிறிமுஸ் சிராய்வா, மன்னார் மாவட்ட தேனி மாற்றுத்திறனாளிகள் மாவட்ட இணையத் தலைவர் ஏ.றொபட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எழுத்தாளர் மதிவளனின் கன்னி முயற்சியாக உருவாக்கப்பட்ட 'உள்ளச் சிதறல்கள்' எனும் கவிதைத் தொகுப்பு நூலை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டு வைத்தார்.



# 9 மாநிலங்களில் 96 தொகுதிகளில் 4ஆம் கட்ட மக்களவைத் தேர்தல்



ஆந்திரா, தெலங்கானா உட்பட 9 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தில் நாளை 4 ஆம் கட்ட மக்களவைத் தேர்தல் இடம்பெறுகின்றது. இதன்படி 96 மக்களவைத் தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்தியா முழுவதும் 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடத்தப்படுகிறது. கடந்த ஏப்ரல் 19, 26, மே 7 ஆகிய திகதிகளில் 3 ஆம் கட்ட தேர்தல்கள் நிறைவடைந்துள்ளன.

நான்காம் கட்டமாக 9 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 மக்களவைத் தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதன்படி ஆந்திராவில் மொத்தமுள்ள 25, தெலுங்கானாவின் 17 மக்களவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடக்கிறது.

ஒடிசாவில் 4, பிஹாரில் 5, ஜார்க்கண்டில் 4, மத்திய பிரதேசத்தில் 8, மகாராஷ்டிராவில் 11, உத்தர பிரதேசத்தில் 13, மேற்கு வங்கத்தில் 8 மற்றும் காஷ்மீரில் ஒரு மக்களவைத் தொகுதிக்கு தேர்தல் நடக்கிறது.

நான்காம் கட்ட மக்களவைத் தேர்தலில் பல்வேறு வி.ஐ.பி. வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். உத்தர பிரதேசத்தின் கன்னோஜ் தொகுதியில் சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் சுப்ரதா பதக் களத்தில் உள்ளார்.

மேற்குவங்கத்தின் கிருஷ்ணா நகர் தொகுதியில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் சார்பில் ம/ஹவா மொய்த்ராவும் பா.ஜ.க. சார்பில் அம்ரிதா ராயும் போட்டியிடுகின்றனர்.

மேற்குவங்கத்தின் பகரம்பூரில் ஆளும் திரிணமூல் சார்பில் கிரிக்கெட் வீரர் யூசுப் பதான் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் காங்கிரஸ் சார்பில் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, பா.ஜ.க. சார்பில் நிர்மல் சந்திர சகா ஆகியோர் களத்தில் உள்ளனர்.

பிஹாரின் பெகுசராய் தொகுதியில் மத்திய அமைச்சரும் பா.ஜ.க. மூத்த தலைவருமான கிரிராஜ் சிங் களமிறங்கி உள்ளார். அவரை எதிர்த்து இண்டியா கூட்டணி சார்பில் இந்திய கொம்யூனிஸ்ட் மூத்த தலைவர் அவதேஷ் ராய் போட்டியிடுகிறார்.

தெலுங்கானாவின் ஹைதராபாத் மக்களவைத் தொகுதியில் ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சியின் தலைவர் அசதுத்தீன் ஒவைஸி போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் நடிகை மாதவி லதா களமிறங்கி உள்ளார்.

# காங்கிரஸ் கட்சி 50 இடங்களில் கூட வெற்றி பெறாது: பிரதமர் மோடி உறுதி




நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 50 இடங்களில் கூட வெற்றி பெறாது என்று ஒடிசாவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலம் கந்தமால் மற்றும் போலாங்கிர் மக்களவை தொகுதிகளில், பா.ஜ.க. சார்பில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் பிரதமர் நரேந்திர மோடி மேலும் உரையாற்றுகையில்,

“ஒடிசாவில் ஏராளமான இயற்கை வளங்கள் உள்ளன. ஆனாலும், இம் மாநில மக்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாக உள்ளனர். இதற்குக் காரணமானவர்களை (பிஜு ஜனதா தளம்) வரும் தேர்தலில் ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும். ஒடிசா மாநிலத்தின் பெருமைக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதை பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் மட்டுமே பாதுகாக்க முடியும். தேர்தலுக்குப் பிறகு இங்கு இரட்டை இன்ஜின் அரசு (மத்தியிலும் மாநிலத்திலும் பா.ஜ.க. ஆட்சி) அமையும். ஒடிசா மொழி மற்றும் கலாச்சாரத்தை புரிந்து கொள்ளக் கூடிய, இந்த மண்ணின் மைந்தர் ஒருவர் புதிய முதல்வராக நியமிக்கப்படுவார்.

நாடாளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சி அந்தஸ்தை பெறுவதற்கான 10 சதவீத இடத்தில் கூட காங்கிரஸ் கட்சியால் ்றி பெற முடியாது. இன்னும் சொல்லப்போனால் 50 இடங்களில்கூட அக்கட்சி வெற்றி பெறாது.

காங்கிரஸ் கட்சியின் இளவரசர் கடந்த 2014ஆம் ஆண்டில் எழுதப்பட்ட அதே குறிப்பையே இன்று வரை வாசித்து வருகிறார். எழுதி வைத்துக் கொள்ளுங்கள், இந்த முறை தேசிய ஜன நாயகக் கூட்டணி 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று அனைத்து சாதனைகளையும் முறியடிக்கும்.

அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான மத்திய பா.ஜ.க. அரசு 26 ஆண்டுக்கு முன்பு இதே நாளில் பொக்ரானில் அணுகுண்டு சோதனையை நடத்தியது. இதன் மூலம் உலக அரங்கில் இந்தியா மீதான மதிப்பு பலமடங்கு உயர்ந்தது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற நாட்டு மக்களின் 500 ஆண்டுகால கோரிக்கை இப்போது நிறைவேறி உள்ளது. ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பழங்குடியின பெண்ணை குடியரசுத் தலைவராக பா.ஜ.க. நியமித்தது. அவர் இப்போது முப்படைகளின் தளபதியாக விளங்குகிறார். இந்தியா வளர்ந்த நாடாக உருவெடுக்க பா.ஜ.வுக்கு வாக்களியுங்கள்.” – என்றார்.




# பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் விலை உயர்வுகளை கண்டித்து போராட்டம்

பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உச்சம் தொட்டுள்ளதால், மக்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

இந்த நிலையில், விலை உயர்வைக் கண்டித்தும் மின்சாரத்துக்கு வரி விலக்கு மற்றும் கோதுமை மாவுக்கு மானியம் கோரியும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு அவாமி செயற்குழு அழைப்பு விடுத்து இருந்தது. ஏராளமான மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். போராட்டக்காரர்களை கலைக்கும் முயற்சியில் பாதுகாப்பு படை இறங்கியது. இந்நிலையில், பாதுகாப்புப் படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே பெரும் வன்முறை வெடித்துள்ளது.

போராட்டத்தில் பங்கேற்க இருந்த 70 களச் செயல்பாட்டாளர்களை வெள்ளிக்கிழமை அன்று பொலிஸ் கைது செய்தது. இதையடுத்து, கோபமடைந்த மக்கள் வெள்ளிக்கிழமை அன்றே அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் தொடர்ச்சியாக, நேற்று பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியான முசாபர்பாத்தில் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் குதித்தனர். போராட்டத்தை கலைக்க பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். மேலும் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். இதனால், அங்கு பெரும் வன்முறை வெடித்தது.

இந்தச் சம்பவம் குறித்து போராட்டக்காரர் ஒருவர் கூறுகையில், “எங்களது அடிப்படை உரிமையைக் கோரி அமைதியான முறையில் போராட்டம் நடத்தினோம். ஆனால், பாகிஸ்தான் பாதுகாப்புபடையினர் எங்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு வீசி தடியடி தாக்குதல் நடத்தினர். இதில் பலர் காயமடைந்துள்ளனர்” என்று தெரிவித்தார்.

## உடலில் பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்ட முதல் நபர் 2 மாதங்களின் பின்னர் உயிரிழப்பு



மரபணு மாற்றப்பட்ட பன்றி சிறுநீரக மாற்று சிகிச்சையின் முதல் பயனாளி, சிகிச்சை முடிந்து இரண்டு மாதங்களுக்குப் பின்னர் நேற்று காலமானார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது குடும்பத்தினரும் அறுவை சிகிச்சை செய்த மருத்துவமனையும் இந்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளன.

62 வயதான ரிச்சர்ட் “ரிக்“ ஸ்லேமேன் என்பவருக்கே கடந்த மார்ச் மாதம் அமெரிக்க மாசசூசெட்ஸ் பொது மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பன்றி சிறுநீரகம் குறைந்தது இரண்டு ஆண்டுகள் செயற்படும் என்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் நம்பிக்கை வெளியிட்டிருந்தனர்.

எனினும் மாற்று அறுவை சிகிச்சையின் விளைவாக அவர் இறந்ததற்கான எந்த அறிகுறியும் கண்டறியப்படவில்லை என்று நிபுணர்கள் தற்போது தெரிவித்துள்ளனர்.

## ஆப்கானிஸ்தான் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300ஆக அதிகரிப்பு

ஆப்கானிஸ்தானின் வடக்கு பாக்லான் மாகாணத்தில் வெள்ளப் பெருக்கினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

வெள்ளப் பெருக்கின் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக வழக்கத்திற்கு மாறாக ஏற்பட்ட மழைவீழ்ச்சியினால் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கினால் மேலும் பலர் காணாமல் போயுள்ளமையினால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

உள்ளூர் மீட்புப் பணிகளுக்கு உதவியாக இராணுவ உலங்கு வானூர்திகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



கனடா முரசு

பக்கங்கள் - 4

ஞாயிற்றுக்கிழமை 12/05/2024


## அல்பர்ட்டா பல்கலையில் கூடாரங்களை அகற்றிய சமயம் வெளியார் மூவர் கைது!

சுஅல்பேர்ட்டா, மே 12

அல்பர்ட்டா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பாலஸ்தீன ஆதரவு முகாமை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது மூன்று பேரை எட்மண்டன் C2 ▶





# நிஜ்ஜார் கொலை தொடர்பில் நான்காவது இந்தியர் கைது!

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 12

பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடந்த ஆண்டு சீக்கிய ஆர்வலர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட வழக்கில் நான்காவது இந்திய நாட்டவர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

22 வயதான அமன்தீப் சிங் ஏற்கனவே ஒன்ராறியோவில் உள்ள பீல் பிராந்திய பொலிஸாரின் பாதுகாப்பில் வேறொரு துப்பாக்கி குற்றச்சாட்டுகளுக்காக காவலில் இருந்தார் என மாகாணத்தின் ஒருங்கிணைந்த கொலை விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

நிஜ்ஜார் வழக்கின் ஆதாரங்கள் பிரிட்டிஷ் கொலம்பியாவின் அரச தரப்பு சட்டத்தரணிகளுக்கு 'போதுமானவை' என்றும், அமன்தீப் சிங் மீது முதல் நிலை கொலை மற்றும் கொலைக்கு சதி செய்தமைக்கான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நடைபெற்று வரும் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக கைது தொடர்பான மேலதிக விவரங்களை வெளியிட முடியாது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதத் தொடக்கத்தில், எட்மண்டனில் மூன்று இந்திய பிரஜைகளை பொலிஸார் கைது செய்து, முதல் நிலை கொலை மற்றும் கொலை செய்ய சதி செய்தனர் எனக் குற்றம் சாட்டியிருந்தனர்.

நிஜ்ஜாரின் மரணம் கனடாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே பதற்றத்தைத் தூண்டியுள்ளது, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த கொலையை இந்திய அரசாங்கத்துடன் தொடர்புபடுத்துவதற்கு நம்பகமான ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

## டொரான்டோவின் முன்னாள் எம்.பி. ஜிம் பீட்டர்சன் மாரடைப்பால் மரணம்



ஒன்ராரியோ, மே 12

டொரான்டோவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் லிபரல் அமைச்சரவை அமைச்சருமான ஜிம் பீட்டர்சன் தனது 82வது வயதில் காலமானார்.

ஜிம் பீட்டர்சனின் சகோதரரும், ஒன்ராறியோவின் முன்னாள் முதல்வருமான டேவிட் பீட்டர்சன் மே 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனது வீட்டில் C2 ▶

## கேடினோவில் மேயர் தெரிவுக்கான இடைத் தேர்தல் ஜூன் 9ஆம் திகதி



கியூபெக்,மே 12

கேடினோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மேயர் இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் காலம் முடிவடைந்துள்ளது.

பெப்ரவரியில் முன்னாள் மேயர் பிரான்ஸ் பெலிஸ்லே பதவி விலகியமையைத் தொடர்ந்து, அவரது வெற்றிடத்திற்கான இடைத்தேர்தலுக்கு ஏழு வேட்பாளர்கள் C2 ▶

# புவிகாந்தப் புயலைத் தொடர்ந்து கனடாவில் பரவலாக வண்ணமய துருவ மின்னொளிகள்!

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 12

பிரிட்டிஷ் கொலம்பியாவில் இடம்பெற்ற புவிகாந்தப் புயலைத் தொடர்ந்து வானில் வண்ணமயமான அரோராக்கள் எனப்படும் துருவ மின்னொளிகள் தோன்றின.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் வானில் இந்த துருவ மின்னொளிகள் தோன்றியிருந்தன.

கனடாவின் பல இடங்களில் வானம் வண்ணமயமான ஒளிக் கீற்றுக்களினால் ஜொலித்து மிளிர்ந்தததனை மக்கள் பார்வையிட்டனர்.

சூரியனில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த புயல் நிலைமையினால் இவ்வாறு வானம் எழில் கோலம் பூண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுவாக பூமியின் துருவப் பகுதிகளில் தென்படக்கூடிய அரோரா அல்லது துருவ ஒளிகளை இம்முறை சில நாடுகளைச் சேர்ந்த மக்களினால் பார்வையிட முடிந்தது.

எவ்வாறெனினும் இந்த சூரியப் புயல் காரணமாக மின்சார விநியோகத்திற்கும் ஜீ.பி.எஸ் தரவுகளுக்கும் மிகச் சிறியளவு தாக்கம் மட்டுமே ஏற்பட்டது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அரோராவை வெள்ளி, சனிக்கிழமை மட்டுமன்றி இன்றைய தினமும் மக்கள் சில இடங்களில் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரகாசமான ஊதா, பச்சை, மஞ்சள், இளஞ்சிவப்பு போன்ற நிறங்களினால் வடக்கு வானம் எழில் கோலம் பூண்டு ஜொலித்திருந்தது.

இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, சீனா, ஜேர்மனி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இந்த அரோராக்களை மக்கள் பார்வையிட்டனர்.










### அல்பர்ட்டா பல்கலையில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்களும், மேலும் பலரும் அல்பேர்ட்டா பல்கலைக்கழக வளாகத்தில் முகாம்களை அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடனான பேச்சுவார்த்தைகள் பலனளிக்காமையைத் தொடர்ந்து, முகாம்களை அகற்றுவதற்கு பொலிஸாரின் ஆதரவை பல்கலைக்கழக நிர்வாகம் கோரியிருந்தது.

நேற்று மே 11ஆம் திகதி காலை பல்கலைக்கழக வாளகத்திற்கு நுழைந்த பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை வெளியேறுமாறு எச்சரித்தனர்.

மே 11ஆம் திகதி அதிகாலை 4:30 மணிக்குப் பின்னர் இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாரிகள் பின்னர் வந்து, மீதமுள்ள எதிர்ப்பாளர்களை வெளியேறுமாறு எச்சரித்தனர். பின்பு வளாகத்திற்கு வெளியே இருந்தவர்களை அகற்றினர்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் அல்லாத மூவர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### கேடினோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரப்பூர்வமாக போட்டியிடுகின்றனர்.

மரண அச்சுறுத்தல்கள் மற்றும் 'விரோதமான' அரசியல் சூழல் ஆகியன காரணமாக பதவி விலகுகின்றார் என பிரான்ஸ் பெலிஸ்லே தெரிவித்திருந்தார்.

இந்த இடைக்காலப் பகுதியில் டேனியல் ஷெம்பெய்ன் தற்காலிக மேயராக இருக்கின்றார்

புதிய மேயருக்கான இடைத்தேர்தல் ஜூன் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

### டொரன்டோவின்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாரடைப்பு ஏற்பட்டு ஜிம் பீட்டர்சன் காலமானார் எனத் தெரிவித்தார்.

பீட்டர்சன் தனது 23 ஆண்டுகால நாடாளுமன்ற வாழ்க்கை முழுவதும் டொராண்டோ தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்,

கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்கான பீட்டர்சனின் பங்களிப்பினை பாராட்டிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அவரது இழப்பு பெரும் வெற்றிடமாக இருக்கும் என கூறியுள்ளார்.



# உக்ரைனுக்கான முதலாவது அமைதி மாநாட்டில் கனடாவும் இருக்கும் என்கிறார் பிரதமர் ட்ரூடோ

உக்ரைனுக்கான முதல் அமைதி மாநாட்டில் கனடா இருக்கும் என கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

முதல் உலக அமைதி உச்சி மாநாடு சுவிட்சர்லாந்தில் ஜுன் மாதம் 15 -16 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

இதில் உக்ரைனுக்கு எதிரான ஆக்கிரமிப்புப் போரை எப்படி முடிவுக்குக் கொண்டுவருவது என்பது குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, இந்த உச்சி மாநாடு ஒரு பாரிய மோதலுக்கு மத்தியஸ்தம் செய்ய நடுநிலையான சுவிட்சர்லாந்தின் பல ஆண்டுகளில் மிகவும் லட்சிய முயற்சியாக பார்க்கப்படுகிறது.

ரஷ்யா உடனான மோதலில் உக்ரைனுக்கு ஆதாரவான நிலைப்பாட்டில் கனடா இருந்து வருகிறது.

இந்த நிலையில், கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது எக்ஸ் பக்கத்தில் உக்ரைன் அமைதி மாநாடு குறித்துப் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், "உக்ரைனுக்கான முதல் அமைதி உச்சி மாநாடு ஜுன் மாதத்தில் நடைபெறுகிறது. கனடா அங்கு இருக்கும். உக்ரைனுக்கான நியாயமான மற்றும் நீடித்த அமைதிக்கான எங்கள் பகிரப்பட்ட இலக்கை முன்னேற்றுவதற்கு, மற்ற உலகத் தலைவர்களுடன் இணைவதற்கு நான் எதிர்நோக்குகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# குழந்தைக்குத் தாய்ப் பால் கொடுத்துக் கொண்டிருந்த பெண்ணைத் திடீரெனத் தாக்கியவர் மடக்கப்பட்டார்!





கனடாவில், காரில் அமர்ந்து தன் குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டிக் கொண்டிருந்த ஒரு பெண்ணை, ஒருவர் திடீரென தாக்கியமையால், பொதுமக்கள் கொந்தளித்த சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வியாழக்கிழமை மதியம் 2.15 மணியளவில், வான்கூவரில், சாலையோரமாக காரை நிறுத்தி, காருக்குள் அமர்ந்து தனது குழந்தைக்கு பாலூட்டிக்கொண்டிருந்தார் ஒரு பெண்.

அப்போது திடீரென அங்கு வந்த ஒருவர், காரின் கதவைத் திறந்து அந்தப் பெண்ணைத் தாக்கியமையுடன், குழந்தையையும் பறிக்க முயன்றுள்ளார். சத்தமிட்ட அந்தப் பெண் குழந்தையை இறுகப்பற்றிக்கொண்டபடி அவரைத் துரத்த முயன்றிருக்கிறார்.

நடப்பதைக் கவனித்த பொதுமக்கள் ஓடோடி வர, ஒருவர் அந்த நபரை மடக்கிப்பிடிக்க, அனைவருமாக, பொலிசார் வரும் வரை அவரைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

அந்த நபருடைய பெயர் Nathaniel Francis Beekmeyer (வயது 26) என தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட அவர் இம்மாதம், அதாவது, மே மாதம் 15ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.

நடந்ததை அறிந்த மக்கள், அந்த பகுதியில் இதுவரை அப்படி நடந்ததில்லை என்கிறார்கள்.

'எனக்கும் ஒரு அம்மாவும், மகளும், தங்கையும் இருக்கிறார்கள். அவர்களில் யாருக்காவது இப்படி நடக்குமென்றால் அதை என்னால் நினைத்துக்கூட பார்க்கமுடியாது' - என்கிறார் ஒருவர்.

எதனால் அந்த நபர் இப்படி நடந்துகொண்டார் என்பது தெரியவில்லை.

சூழ்நிலை மாறிக்கொண்டே வருகிறது என்று கூறும் டேனியல் என்பவர், இங்குள்ள காபி ஷொப்களிலும் இது போல சில நுழைந்து போதையின் கட்டுப்பாட்டில் கலாட்டா செய்கிறார்கள். கேட்டால், போதைப்பொருள்கள் சட்டப்படியானவைதானே என்கிறார்கள் எனக் கூறுகிறார்.

# கொவிட் தடுப்பூசிக் கொள்கையை சீர்திருத்தி அமைக்க வலியுறுத்தல்

அல்பேர்ட்டா, மே 12

குழந்தைகளுக்கான எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசிகளின் பாதுகாப்பு குறித்து பணிப்பாளர்கள் கவலைப்படுகின்றமையால், கொவிட் தடுப்பூசிக் கொள்கையை சீர்திருத்துமாறு மாகாண முதல்வர் டேனியல் ஸ்மித்திடம் மாகாண யுனைட்டட் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் கோரியுள்ளார்.

'குழந்தைகளுக்கு அவற்றை அளிப்பது தொடர்பில் தமக்கு தீவிரமான கவலைகள் உள்ளன,' என்று யுனைட்டட்



கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் ரொப் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

'பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப் போகிறார்களானால், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதில் அவர்கள் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும்' என அவர் மேலும் கூறியுள்ளார்.

நடைமுறையில் மாற்றம் எப்படி இருக்கும் என்று கேட்டதற்கு, ரொப் ஸ்மித், 'அவர்கள் வழங்கும் தடுப்பூசி பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் AHS சிறப்பாகச் செயல்படும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



# சிரிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கனடியர்களில் பெரும் பகுதியினர் திரும்பினர்

ஒன்ராரியோ, மே 12

சிரிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கனடியர்களில் பாதிக்கும் அதிகமானவர்கள் நாடு திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐஎஸ் ஐஎஸ் குடும்ப உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் சிரிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கனடியர்களில் பாதிக்கும் அதிகமானவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

வடகிழக்கு சிரியாவில் உள்ள தடுப்பு முகாம்களில் இருந்து மொத்தம் 29 கனடியர்கள் விடுவிக்கப்பட்டு கனடாவிற்கு மீண்டும் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

2020 இல் கனடியர்களை மீள அழைத்து வரும் முயற்சிகள் ஆரம்பித்ததிலிருந்து, மொத்தம் 22 சிறுவர்கள், ஏழு பெண்கள் நாடு திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மொன்ரியல் நகரை சேர்ந்த பெண்ணின் ஆறு சிறுவர்கள் மீண்டும் கனடாவுக்கு அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிரியா – துருக்கிய எல்லையில் குர்திஷ் அதிகாரிகளால் நடத்தப்படும் முகாம்களிலும் சிறைகளிலும் குறைந்தது 17 கனடியர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் டொரன்டோ நகர புத்தக வெளியீட்டில்

ஒன்ராரியோ, மே 12

டொரன்டோ நகரில் இடம்பெற்ற புத்தக வெளியீட்டில் மாகாண சபை உறுப்பினரும், இணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் கலந்து கொண்டார்.

மாதனி குமரேஷனால் 'புரிதல்', 'இரை தேடும் பறவைகள்' மற்றும் 'மிட்னைட்ஸ் டோல்' ஆகிய நூல்கள் அண்மையில் வெளியிடப்பட்டன.

மாதனி குமரேஷ் தமது மகள் ஆர்த்திகா குமரேஷுடன் இணைந்து 'வலியும் ஜெஸ்மினும்' என்ற நூலை எழுதியுள்ளார்.




இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்ட இணை அமைச்சர் விஜய் தணிகாசலம், தமிழ் மொழி மற்றும் வரலாற்றினை அடுத்த தலைமுறை தமிழர்கள் கொண்டு சேர்க்கும் அரிய முயற்சியை பாராட்டியுள்ளார்.